இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 04-07-2024

# முறைகேடுகளை மறைக்கவே காவிப் பேச்சுகள்

**குற்ற வழக்குகள் உள்ள சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஜெகநாதனுக்கு பதவி நீட்டிப்பு வழங்கியதன் மூலமாக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் தரம் என்ன என்பது வெட்ட வெளிச்சம் ஆகி இருக்கிறது.**

**எட்டு பிரிவுகளின் கீழ் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளவர் ஜெகநாதன். அரசு செயலர் விசாரணை அறிக்கையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டவர் ஜெகநாதன். அவருக்கு ஓராண்டு பணி நீட்டிப்பை வழங்கி இருக்கிறார் நித்தமும் 'நல்லொழுக்க வகுப்பு' நடத்தி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி.**

போலி ஆவணங்களைத் தயாரித்து தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டதாகவும், அரசு அலுவலர்களை தனது தனிப்பட்ட நிறுவனங்களுக்கு பயன்படுத்தியதாகவும் சேலம் பெரியார் பல்கலைக் கழக தொழிலாளர் சங்கத்தின் சட்ட ஆலோசகர் இளங்கோவன் காவல் துறையில் துணைவேந்தர் ஜெகநாதன் மீது புகார் கொடுத்தார். பணிக்காலத்தில் இவரே ஒரு அமைப்பைத் தொடங்கியும் இருக்கிறார். அந்த அமைப்பை வைத்து பல்கலைக் கழகப் பணிகளை பார்த்து, முறைகேடுகளைச் செய்துள்ளார். இதன் மூலமாக பல்கலைக் கழக நிதியை தனது லாபத்துக்கு பயன்படுத்தி இருக்கிறார் என குற்றச்சாட்டு எழுந்தது. இதன்படி சேலம் கருப்பூர் காவல் துறையால் கைது செய்யப்பட்டவர் தான் ஜெகநாதன். முறைகேடு வழக்கு மட்டுமல்ல, வன்கொடுமை தடுப்பு சட்ட வழக்கும் அவர் மீது இருக்கிறது. 8 பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்ட அவர் ஜாமீனில் தான் வெளியில் நடமாடி வருகிறாரே தவிர, விடுதலை ஆகிவிடவில்லை. சூரமங்கலம் காவல் நிலையத்தில் தினமும் கையெழுத்து போட்டவர் தான் இந்த ஜெகநாதன்.

பல்கலைக் கழக வளாகத்தில் காவல் துறை விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அங்கு சென்றவர் தான் ஆளுநர் ரவி. சர்ச்சைக்குரிய ஜெகநாதனை சந்தித்து பேச்சுவார்த்தையும் நடத்தினார் ஆளுநர். அதாவது, 'ஜெகநாதனுக்கு நானே துணை' என்பதைப் போல இருந்தது ஆளுநரின் நடவடிக்கைகள். மூன்றாண்டு பதவிக்காலம் முடிந்த பிறகாவது அவரை அனுப்பி வைத்திருக்கவேண்டும். முறைகேடுகளைச் செய்பவர்களுக்கு உடந்தையாக இருப்பதை தைரியமாக இந்த நாட்டுக்குச் சொல்ல நினைக்கிறார் ஆளுநர். 'என்னை யார் கேள்வி கேட்க முடியும்?' என்ற அதிகாரத் தோரணையில் நடந்து கொள்கிறார் ஆளுநர்.

**துணைவேந்தர் ஜெகநாதனின் மூன்றாண்டுகால பதவிக் காலம் ஜீன் 30 ஆம் தேதியுடன் முடிந்துவிட்டது. அடுத்து புதிய துணைவேந்தரை, அதற்கான குழு மூலமாக தேர்ந்தெடுக்க வேண்டும். பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் பிரதிநிதி ஒருவரும், ஆட்சிப் பேரவையின் பிரதிநிதி ஒருவரும் தேர்வு செய்யப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அக்குழுவின் அமைப்பாளராக ஐ.ஏ.எஸ். அதிகாரி நிலையிலான ஒருவர் பெயர் ஆளுநருக்கு அரசு சார்பில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அந்த மூன்று பெயர்கள் அடங்கிய பட்டியல் ஆளுநர் மாளிகையால் வெளியிடப்பட்டு அந்த அறிவிப்பு அரசிதழில் வெளியான பின்பு புதிய துணைவேந்தர் தேர்வுக்கான பணிகள் தொடங்கும்.**

ஆட்சிக்குழு, ஆட்சிப்பேரவையின் உறுப்பினர்களான இரண்டு பேரின் பெயர், பல்கலைக் கழகத்தில் இருந்து ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டு 20 நாளைக்கு மேல் ஆகிறது. குழுவின் அமைப்பாளர் பெயர் உயர் கல்வித்துறையில் இருந்து ஒரு மாதத்திற்கு முன்பே ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் புதிய துணைவேந்தர் தேடுதல் தேர்வுக் குழுவுக்கான அறிவிப்பை ஆளுநர் மாளிகை வெளியிடவில்லை. ஏற்கனவே சர்ச்சையில் சிக்கிய ஜெகநாதனுக்கே பணி நீட்டிப்பை வழங்கி இருக்கிறார் ஆளுநர் ரவி.

ஜெகநாதன் மீது, நடத்தப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை அரசால் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு பல மாதங்கள் ஆகின்றன. அதன் மீதும் ஆளுநர் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை. பெரியார் பல்கலைக்கழகத்தில் பணி நியமனம், கணினி உபகரணங்கள் கொள்முதல், இணையதள தளவாடங்கள் கொள்முதல், இணையதள சேவை கட்டமைப்புகள் உருவாக்குதல், பட்டியலின மாணவர்களின் திறன் மேம்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.2 கோடியில் முறைகேடு, அமேசான் இணைய முறைகேடு, வளாக பராமரிப்பில் முறைகேடு என எழுந்த புகார்களை விசாரிக்க பழனிச்சாமி ஐ.ஏ.எஸ். தலைமையில் இரு நபர் குழு அமைக்கப்பட்டது.

அந்த குழு, ஓராண்டில் விரிவான விசாரணை நடத்தி அரசிடம் அறிக்கை கொடுத்தது. அதில், துணைவேந்தர் ஜெகநாதன் மீது 6 குற்றச்சாட்டுகளும், பதிவாளர் தங்கவேல் மீது 8 குற்றச்சாட்டுகளும், தமிழ்த்துறைத் தலைவர் பெரியசாமி மீது 5 குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கணினி அறிவியல் பேராசிரியரும், பதிவாளருமான தங்கவேல் மீது 8 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதால், அவரை உயர்கல்வித் துறை உடனடியாக பணிநீக்கம் செய்தது.

சேலம் கருப்பூர் காவல்நிலையத்தில் ஜெகநாதன் உள்ளிட்டோர் மீதான குற்ற வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தால் தடை தான் விதிக்கப்பட்டுள்ளது. வழக்கு ரத்து செய்யப்படவில்லை. அவர் மீதான ஜாமீன் ரத்து வழக்கு விசாரணையும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தீனதயாள் உபாத்தியாயா பெயரிலான நிதியை வைத்தே ஊழல் செய்துள்ளார்கள். அதையே கண்டுகொள்ளவில்லை ஆளுநர். பட்டியலின மாணவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். அதைப் பற்றியும் கவலை இல்லை. ஜெகநாதனுக்கு பணிநீட்டிப்பு வழங்கி இருப்பதன் மூலமாக யாரும் எதையும் செய்யலாம் என்ற லைசென்ஸை ஆளுநர் வழங்கி இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

**தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களை கடந்த இரண்டு ஆண்டு காலமாக நாசம் செய்து கொண்டிருக்கிறார் ஆளுநர் ரவி. இந்த தவறுகளையும் முறைகேடுகளையும் மறைப்பதற்காகத் தான் காவி வகுப்புகளை நடத்தி திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்.**

## தமிழகத்தில் 8ந்தேதி வரை மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூலை 4-

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக வரும் 8ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து குத்தாம்பூண்டி பகுதியில் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வாக்குச் சேகரித்தார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர்கள் பி.கே.சேர்கர்பாபு, சி.வி.கணேசன் ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வான

# சிறை அலுவலர்கள் 49 பேருக்கு பணி நியமன ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜீலை 4 -**

**சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் 5 சிறை அலுவலர் மற்றும் 44 உதவி சிறை அலுவலர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.7.2024) தலைமைச் செயலகத்தில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 5 சிறை அலுவலர்கள் மற்றும் 44 உதவி சிறை அலுவலர்கள் பணி யிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையானது, நீதிமன்றங்கள் குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனைகளை நிறைவேற்றுவது மட்டுமின்றி, அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான கல்வி மற்றும் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் பாதுகாப்பினை மேம்படுத்துதல், சிறைவாசிகளின் நலன் மற்றும் சிறைவாசிகளை பொறுப்புள்ள நபர்களாக மாற்றி சமுதாயத்தில் மீண்டும் இணைத்தல் ஆகிய மூன்றும் இத்துறையின் முக்கிய நோக்கங்களாகும்.

2023-2024ஆம் ஆண்டில் சிறைவாசிகளின் நலனுக்கான நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு முறை மற்றும் உணவின் அளவு ரூ.26 கோடி கூடுதல் செலவில் சரிவிகித சத்துள்ள உணவாக மாற்றம் செய்து வழங்கப்பட்டு வருவதுடன், உணவு தயாரித்திட தேவையான கிரைண்டர், உலர் மாவரைக்கும் இயந்திரம், சிறைவாசிகளுக்கு உரிய நேரத்தில் உணவு விநியோகம் செய்திட இஆட்டோ ஆகியன ரூ.1.23 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 600 சிசிடிவி கேமராக்கள் ரூ.11.50 கோடி செலவில் நிறுவிட உத்தரவிடப்பட்டு, சிறை பாதுகாப்பினை மேற்படுத்த நேரியல் அல்லாத சந்திப்பு கண்டுபிடிப்பான், ஊடுகதிர் அலகிடும் கருவி போன்ற நவீன உபகரணங்கள் ரூ.5.98 கோடிசெலவில்நிறுவப்பட்டுள்ளன.

சிறைவாசிகள் தங்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடன் பேச மாதம் 10 தொலைபேசி அழைப்புகள் செய்திடவும் (ஆடியோ மற்றும் வீடியோ), சிறைவாசிகள் தயாரிக்கும் பொருட்களை காவல்துறை அங்காடியில் விற்பனை செய்திடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட சிறை நூலகங்களை மேம்படுத்திட ரூ.2.09 கோடிவழங்கப்பட்டுள்ளது.

சிறை அலுவலர் என்பவர் சிறையின் முதன்மை செயல் அலுவலர் ஆவார். இவரது முக்கியப் பணி சிறைவாசிகளிடையேயும், பணியாளர்களிடையேயும் ஒழுக்கத்தைப் பேணுவதாகும். உதவி சிறை அலுவலரின் முக்கியப் பணி மத்திய சிறைகளில் சிறைவாசிகளை அனுமதி எடுத்தல், ஆடை, உடமை போன்றவற்றை பராமரித்தல் ஆகும். கிளைச்சிறைகளை பொறுத்தவரை கண்காணிப்பாளராக செயல்படுவர்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சிறை அலுவலர் மற்றும் உதவி சிறை அலுவலர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறை அலுவலர்கள் 5 நபர்களுக்கும், உதவி சிறை அலுவலர்கள் 4 பெண்கள் உட்பட 44 நபர்களுக்கும் நேற்று முன்தினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தற்போது பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ள சிறை அலுவலர் / உதவி சிறை அலுவலர்களுக்கு வேலூரில் அமைந்துள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பயிற்சியகத்தில் 9 மாத கால அடிப்படை பயிற்சி அளிக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் டாக்டர் மகேஷ்வர் தயாள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைவர் இரா. கனகராஜ் மற்றும் சிறைத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விக்கிரவாண்டித் தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.க.வின் வெற்றி பிரகாசமாக இருக்கிறது!

## கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் வீதி வீதியாகப் பிரச்சாரம் – பேட்டி !

விக்கிரவாண்டி, ஜீலை 4 -

விக்கிரவாண்டி தொகுதியில் தி.மு.க. வேட்பாளரின் வெற்றி மிகப் பிரகாசமாக இருப்பதாக தி.மு.க. பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தெரிவித்துள்ளார்.



விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து வாகனம் மூலம் வீதி, வீதியாகச் சென்று அமைச்சர் துரைமுருகன் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தி.மு.க. வேட்பாளரின் வெற்றி மிகப் பிரகாசமாக இருப்பதாக தெரிவித்தார். அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அன்னியூர் சிவா வெற்றி பெறுவார் என்றும் அவர் கூறினார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் நல்லாப்பாளையம் கிராமத்தில் இந்தியா கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன். கவுதமசிகாமணி, திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ், சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன், காணை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.முருகன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.